## அரபு நாடுகளின் கூட்டமைப்பின் பொதுச்செயலாளரின் இந்தியாவிற்கான அரசுமுறைப்பயணம், 16-18 டிசம்பர் 2013

அரபு நாடுகளின் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மேதகு டாக்டர் நாபில் எலாரபி இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு சல்மான் குர்ஷித் விடுத்த அழைப்பினை ஏற்று 2013 டிசம்பர் 16ந்தேதி முதல் 18ந் தேதி வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வருகை புரிந்துள்ளார்.

இந்த விஜயத்தின் போது டாக்டர் நாபில் எலாரபி, மேதகு குடியரசுத் தலைவர் திரு அமீது அன்சாரியையும் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு சல்மான் குர்ஷித்தையும் சந்தித்தார். பரஸ்பரம் விருப்பம் விளைவிக்கும் இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள், சிரியா மற்றும் மத்திய கிழக்காசிய அமைதி நடைமுறைகள் குறித்த விரிவான பிரச்சினைகள் குறித்து தனது கருத்துக்களை பரிமாரிக் கொண்டனர்.

இந்தியா மற்றும் அரபு நாடுகளின் கூட்டமைப்பிற்கு இடையேயான ஒத்துழைப்பு தொடர்பான புதிய உடன்படிக்கை மற்றும் 2014-16ம் ஆண்டிற்கான புதிய செயல் திட்டம் ஆகியவை இந்த வருகையின் போது கையெழுத்தாயின. இந்த ஆவணங்கள் இந்தியா மற்றும் 22 அரபு நாடுகளின் மூத்த அதிகாரிகய் மற்றும் அமைச்சகங்கள் மட்டத்தின் இடையேயான கட்டமைப்புடன் கூடிய பங்கேற்பினை நெறிமுறைப்படுத்துவதற்கு உந்துதலை வழங்கும்.. வாணிபம் மற்றும் முதலீடு, எரிசக்தி, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள், கலாசாரம், திறன் மேம்பாடு போன்றவற்றில் ஒத்துழைப்பிற்கு வழிவகுக்கும்.

இந்தியா மற்றும் அரபு நாடுகள் ஆழமான வரலாற்று ரீதியான கலாசார மற்றும் நாகரீகம் சார்ந்த பிணைப்புகளை பகிர்ந்து கொள்கின்றன. காலனி ஆதிக்க எதிர்ப்பு மற்றும் தெற்கு -தெற்கு ஒத்துழைப்பு போன்றவற்றில் பகிர்ந்து கொள்ளப்பட்ட நம்பிக்கைகளை கொண்டுள்ளது..சர்வதேச அமைதி, பாதுகாப்பு போன்றவற்றை பேச்சுவார்த்தை மற்றும் ஆலோசனைகள் மூலம் பெற்று பாதுகாத்து விரிவுபடுத்துவது என்பதில் வலுவான உறுதி பாட்டினைக் கொண்டுள்ளன.

**புது தில்லி**
**டிசம்பர் 17, 2013**